# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# முதலாம் தவணை – 2020
# தரம் 10 – பகுதி 11
# வணிகக்கல்வியும் கணக்கீடும்
# பயிற்சி வினாக்கள்

**வினா இல 01**

1. (அ) மனித தேவைகள் என்றால் என்ன?
   (ஆ) கீழே தரப்படும் விடயங்களை தேவைகள் வேறாகவும், விருப்பங்கள் வேறாகவும் பட்டியல்படுத்திக் காட்டுக.

| | | |
|---|---|---|
| கல்வி | இடியப்பம் | தென்னம் ஓலையால் வேய்ந்த வீடு |
| சுகாதாரம் | உறையுள் | கண்ணாடி வளையல் |

2. வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கமைய வணிகங்களை வகைப்படுத்திக் காட்டுக.

3. உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் தருக.

4. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.
   a) யாதேனும் வணிகமொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்குச் சமமான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துபவர்கள் வழங்குநர் எனப்படுவர்.
   b) வசிப்பிடம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பன தேவைகள் ஆகும்.
   c) குடிபானங்கள், மோட்டார்வாகனம், மின்குமிழ் என்பன பொருள் உற்பத்தி வணிகங்களுக்கு உதாரணங்கள் ஆகும்.
   d) தேவைகளை வணிகர்களால் தோற்றுவிக்க முடியாதிருப்பதுடன் விருப்பங்களை தோற்றுவிக்க முடியும்.

**வினா இல 02**

1. வணிகச் சூழலை வகைப்படுத்திக் காட்டுக.

2. பின்வரும் சட்டதிட்டங்களை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பதவிகள் அல்லது நிறுவனங்களைக் குறிப்பிடுக.
   (அ) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
   (ஆ) 2003 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்.

3. (அ) பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு நான்கு உதாரணம் தருக.
   (ஆ) உள்நாட்டு வணிகத்தில் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டு தருக.

4. பின்வரும் விடயங்களை வணிகமொன்றின் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் என வேறுபடுத்திக் காட்டுக.
    a) புதிய தொழினுட்ப முறைகளிற்கு இயைபாக்கமடைவதில் காணப்படும் சிரமங்கள்
    b) நவீன தொழினுட்பங்களை பயன்படுத்தாமை
    c) போதியளவான மூலதனம் காணப்படுதல்
    d) வணிகத்திற்கு வரிச்சலுகைகள் கிடைத்தல்

**வினா இல 03**

1. பின்வரும் வணிக நிறுவனங்களை தனியார்துறை வணிகம், பொதுத்துறை வணிகம் என வகைப்படுத்திக் காட்டுக.
    a) குமரன் ஸ்ரோர்ஸ்
    b) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
    c) இலங்கை மின்சார சபை
    d) சண்முகம் அன்ட் சண்ஸ்
    e) வரையறுக்கப்பட்ட நிப்பொன் கம்பனி
    f) சுகாதாரத் திணைக்களம்
    g) ஸ்ரார் விளையாட்டுக் கழகம்
    h) நகர சபை/ பிரதேச சபைகள்

2. வணிக அமைப்புக்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்தும்போது அளவு ரீதியாக வகைப்படுத்தும் நியதிகள் இரண்டு தருக.

3. தனியாள் உரிமை வணிக அமைப்பின் அனுகூலங்கள் நான்கு தருக.

4. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா எனக் குறிப்பிடுக.
    a) ஜனநாயக நிருவாகம், சுயமான திறந்த அங்கத்துவம் கொண்ட வணிக அமைப்பு கூட்டுத்தாபனம் ஆகும்.
    b) அரச நிதிப்பிரமாணங்கள், நிருவாகப்பிரமாணங்கள், பல்வேறு சுற்றுநிருபங்கள் போன்றவற்றிற்கேற்பத் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரச அமைப்பு அரச திணைக்களங்கள் ஆகும்.
    c) கமலக்கண்ணன் என்பவர் தனது வணிகத்தை கண்ணன் பெயரில் நடாத்திச் செல்வாராயின் வணிகத்தின் பெயரை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
    d) பங்காளரது ஆரம்ப மூலதனம் ரூ 1000 அல்லது அதற்கு மேற்பட்டடின் பங்குடைமை எழுத்து மூலமான ஒப்பந்தத்தை கொண்டிருக்க வேண்டுமென 1890 ஆம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டம் வலியுறுத்துகின்றது.

**வினா இல 04**

1. (அ) மனித விருப்பம் என்றால் என்ன?
   (ஆ) மனித விருப்பங்களின் பண்புகள் இரண்டு தருக.

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? எனக் குறிப்பிடுக.
    i. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களால் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள் மூலதனம் எனப்படும்.
    ii. யாதேனும் வணிகமொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருளுக்கு சமமான பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர் வழங்குநர் ஆவார்.

iii. வணிகமொன்றில் ஊழியர்கள் அகச் சூழலாக காணப்படும் அதேவேளை போட்டியாளர் புறச்சூழல் காரணியாகக் காணப்படுகின்றனர்.

iv. பலநோக்கு கூட்டுறவுச் சங்கமானது உரிமையடிப்படையில் தனியார்துறைக்குரிய அமைப்பாகும்.

3. பாடசாலையிலிருந்து கிடைக்கப்பெறும் கட்டளைக்கமைய புதிய தையல் இயந்திரங்களை கொண்டு பாடசாலை மாணவருக்கான கழுத்துப்பட்டி, மற்றும் சீருடைகளை உற்பத்தி செய்தல் தொடர்பான வணிகமொன்றை ஆராதனா நடாத்தி வருகின்றார்.
(அ) ஆராதனாவின் வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை யாது?
(ஆ) இந்த வணிகத்தில் காணப்படும் உற்பத்திக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. விலங்கு வேளாண்மை தொடர்பாக டிப்ளோமா பட்டம் பெற்ற ரொஷான் என்பவர் இயற்கை உணவு வகைகளுக்கான அதிகரித்த கேள்வியினைக் கருத்தில்கொண்டு இரண்டு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி விலங்கு பண்ணை ஒன்றை நடாத்தி வருகின்றார்.
(அ) சம்பவத்தில் குறிப்பிடப்படும் அகச்சூழல் காரணிகள் இரண்டு தருக.
(ஆ) ரொஷானின் வணிகத்தில் இனங்காணக்கூடிய பலம் மற்றும் வாய்ப்பு ஒவ்வொன்று தருக.

## வினா இல- 05

1. (அ) வணிகச்சூழல் என்றால் என்ன?
(ஆ) வணிகச்சூழலின் இருவகைகளையும் குறிப்பிடுக.

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா எனக் குறிப்பிடுக.
i.தேவைகளை உருவாக்க முடியாது. விருப்பங்களை வணிகர்களால் தோற்றுவிக்க முடியும்.
ii.உள்ளகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வாய்ப்பு, அச்சுறுத்தலை அறிந்து கொள்ள முடியும்.
iii.வணிக அமைப்புக்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்தும்போது பயன்படுத்தும் வலுவின் அளவு
என்பது அளவு ரீதியான நியதியாகும்.
iv.சுதந்திரமான தீர்மானமெடுத்தல் என்பது பங்குடைமை வணிகத்தில் காணப்படும் அதேவேளை தனியுடைமை வணிகத்தில் காணப்படுவதில்லை.

3. பிரபல பாடசாலைக்கு அண்மையில் இந்திரன் என்பவர் காகிதாதிப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை 'சேகரம் புத்தகசாலை' என்னும் பெயரில் நடாத்தி வருகின்றார்.
(அ) மேற்குறித்த வணிகம் எவ்வணிக அமைப்பைச் சார்ந்தது?
(ஆ) மேற்படி வணிகத்தை பதிவு செய்வது தொடர்பான சட்டத்தேவைப்பாட்டினைக் குறிப்பிடுக.

4. பின்வரும் அக்கறை செலுத்தும் தரப்பினரிடமிருந்து வணிகமொன்று எதிர்பார்க்கும் பங்களிப்பு ஒவ்வொன்றுவீதம் குறிப்பிடுக.
(அ) வழங்குநர்
(ஆ) அரசாங்கம்

## வினா இல 06

1. (அ) இலாபநோக்கற்ற தனியார்துறை அமைப்புக்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.
(ஆ) பங்குடைமை ஒன்றில் பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என வரையறுக்கும் சட்டத்தைக் குறிப்பிடுக.

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா எனக் குறிப்பிடுக.
   i. உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவை மூலதனம் எனப்படும்.
   ii. நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, இலங்கை மின்சார சபை என்பன கூட்டுத்தாபன வணிக அமைப்பைச் சார்ந்ததாகும்.
   iii. சமூக நல நோக்கம் கொண்ட நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளைக் கருத முடியும்.
   iv. வணிக உலகில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகள் மிக விரைவில் காலவதியாகும் நிலைக்கு தள்ளப்படுவதற்கு காரணமாக அமையும் சூழல் பொருளாதாரச் சூழல் ஆகும்.

3. வணிக அமைப்புக்களின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.
   A. அங்கத்தவர் நலன் கருதி செயற்படுகின்றமை
   B. சட்டஆளுமை காணப்படுதல்
   C. நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது
   D. மிகை அங்கத்தவர்களிடையே பகிரப்படல்
   E. நட்டப்பொறுப்பு பரவலாக்கப்பட்டடுள்ளது

   (அ) மேற்கூறிய பண்புகளில் கூட்டுறவு வணிக அமைப்புக்களின் பண்புகளைக் குறிக்கும் எழுத்துக்களைக் குறிப்பிடுக.
   (ஆ) எழுத்து B, C என்பவற்றினால் குறிக்கப்படும் பண்புகள் எவ்வகை இலாப நோக்குள்ள வணிக அமைப்பிற்கு காணப்படுகின்றது.

4. (அ) அரச திணைக்களங்களின் பண்புகள் இரண்டு தருக.
   (ஆ) வணிகமொன்று தனது முகாமைச் செயற்பாடுகளை நபர்கள் பலபேர்களுக்கிடையில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றதாயின் எவ்வகை வணிக அமைப்பை குறித்த வணிகம் ஆரம்பிக்க முடியும்.

**வினா இல 07**

1. அ) தேவை மற்றும் விருப்பம் ஆகியவற்றை வேறுபடுத்துக?
   ஆ) இலாப நோக்குடைய வணிகங்களில் பொதுவான நோக்கங்கள் 2 தருக?

2. பின்வரும் கூற்றுகள் உண்மையானதா அல்லது பொய்யானதா எனக் கூறுக.
   a) மனிதன் உயிர் வாழ்வதற்கு ஒரு விருப்பத்தினையாவது பூர்த்தி செய்தல் கட்டாயமானதாகும்.
   b) வணிகம் தொடர்பாக ஒருவரினால் வழங்கப்படும் உடல் உள ரீதியான பங்களிப்பு முயற்சியாண்மை எனக் கூறப்படும்.
   c) வணிகத்தின் புறச்சூழல் தொடர்பாக அறிந்து கொள்வதன் மூலம் சந்தர்ப்பங்களையும் சவால்களையும் தெரிந்து கொள்ள முடியும்.
   d) தனியுடைமை வணிகத்தில் பெயரை பதிவு செய்வதன் மூலம் வணிகத்திற்கு அடையாளம் ஒன்று கிடைக்கும்.

3. பாடசாலைகளில் கிடைக்கப்பெறும் கட்டளைகளுக்கு அமைய புதிய தையல் இயந்திரங்களை கொண்டு பாடசாலை மாணவருக்கான கழுத்துப்பட்டி (Tie) மற்றும் பாடசாலைச் சின்னம் (Batch) உற்பத்தி செய்தல் தொடர்பான வணிகமொன்றை சஹானா நடாத்தி வருகின்றார்.
   அ) சஹானாவின் வணிகத்தின் மூலம் வழங்கப்படும் அடிப்படை மனித தேவை யாது?
   ஆ) இந்த வணிகத்தில் காணப்படும் உற்பத்தி காரணிகளை 2 உதாரணங்களுடன் தருக.

4. ஆரம்பக்கல்வி டிப்ளோமாதாரியான மிருதுளா என்பவர் 2 தொழிலாளர்களை சேவையில் சேர்த்துக் கொண்டு அரச அடுக்கு மாடித்தொடர்களுக்கு அருகில் ஆரம்ப பாடசாலை மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையம் ஒன்றை நடாத்திவருகின்றார்.
அ) சம்பவத்தில் குறிப்பிடப்படும் அகச்சூழல் காரணிகள் 2 குறிப்பிடுக.

ஆ) மிருதுளாவின் வணிகத்தில் இனங்கானக்கூடிய பலம் மற்றும் வாய்ப்பு ஒவ்வொன்று தருக.

**வினா இல 08**

1. தேவைகளை நிறைவேற்றும் நான்கு வணிகங்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.
   A. சுவையூற்று குளிர்களி விற்பனை நிலையம்
   B. பெண்களுக்கான அழகுசாதன பொருள் விற்பனை நிலையம்
   C. டயலாக் தொலைத்தொடர்பு நிறுவனம்
   D. யாழ் நூலகம்

(அ) மேற் குறிப்பிட்ட நிறுவனங்களினால் நிறைவு செய்யப்படும் மனித தேவைகளைக் குறிப்பிடுக.

(ஆ) மேற்படி நிறுவனங்களினால் நிறைவு செய்யப்படும் விருப்பங்களுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.
   i. வணிகமொன்றில் இடர்களை பொறுப்பேற்று புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்துபவர் முகாமையாளர் ஆவார்.
   ii. முன்னைய காலங்களில் பயன்படுத்தப்பட்ட சாதாரண தபாலுக்கு பதிலாக தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் என்பன பயன்படுத்தப்பட்டு வருவதற்கு காரணமாக அமையும் சூழல் தொழில்நுட்பச் சூழல் ஆகும்.
   iii. கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் என்பன இலாப நோக்கற்ற வணிக அமைப்புக்களில் தனியார் துறையை சார்ந்ததாகும்.
   iv. ஜனநாயக முறையிலான நிர்வாக முறைமை காணப்படுவது கூட்டுத்தாபன வணிக அமைப்புக்களில் ஆகும்.

3. தேசிகன் என்பவர் தனது சொந்த சேமிப்பு மற்றும் மக்கள் வங்கியில் பெற்ற கடனை பயன்படுத்தி கணினி மற்றும் மடிக்கணினி திருத்தும் வணிகமொன்றை இரண்டு ஊழியர்களை வேலைக்கமர்த்தி நடாத்தி வருகின்றார்.
அ. மேற்படி வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக.

ஆ. மேற்படி வணிகம் உற்பத்தியின் தன்மை அடிப்படையில் எவ்வகை வணிகமெனக் கருத முடியும்?

4. நகரமயமாக்கம் காரணமாக இலங்கையில் தற்போது நிர்மாணத் துறையானது அதீத வளர்ச்சி கண்டு வருவதனை அவதானித்த நிமலன் கட்டிட ஒப்பந்த நிறுவனமொன்றை 'ஸ்மார்ட் கொன்ஸ்ரக்சன்ஸ்' என்னும் பெயரில் ஆரம்பித்திருந்தார். நிமலன் வணிகத்தின்,
அ. வாய்ப்பு ஒன்றினைக் குறிப்பிடுக.

ஆ. ஸ்மார்ட் வணிகம் கட்டிடங்களை கட்டுவதற்கு தேவையான சீமேந்து கற்களை தானே உற்பத்தி செய்கின்றரெனின், சீமேந்து கற்கள் எந்த உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்.

**வினா இல 09**

1. (அ) பொதுவாகக் காணப்படும் வணிக நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக
(ஆ) வணிகமொன்றில் உள்ளக ரீதியாக அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக
i. மனித தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்கின்ற தொட்டுணரக் கூடியவையும், பௌதிகத் தன்மை கொண்டவையும் சேவைகள் எனப்படும்.
ii. அரசு குறைவான வட்டி வீதத்தில் கடன்முறைகளை அறிமுகப்படுத்துவதானது ஒரு வணிகத்திற்கு வாய்ப்பாகும்.
iii. பங்குடமை ஒன்றின் பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் குறிப்பிடுகின்றது.
iv. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டத்தின் கீழ் அல்லது பொதுவான சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள் உருவாக்கப்படுகின்றன.

3. பாலன் என்பவர் பிரம்பிலான கதிரை மேசைகளை அவரின் ஆக்கத்திறனால் வெவ்வேறு வடிவங்களில் அவரின் உதவியாளர் ஒருவரின் உதவியுடன் அழகிய வர்ணங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வருகின்றார்.
(அ) இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிகத்தின் இரண்டு உற்பத்திக் காரணிகளை எழுதுக
(ஆ) நீர் மேலே 3 (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வோர் காரணிகளுக்கும் இச்சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.

4. ரதன் தன்னிடம் உள்ள சிறிய தொகையைப் பயன்படுத்தி "ரதி புடைவை வணிகம்" என்ற பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார்.
(அ) ரதனின் வணிகத்தை பதிவு செய்வது தொடர்பான உமது கருத்தினைக் குறிப்பிடுக.
(ஆ) ரதனின் வணிகத்தில் விஷேடமாக காணப்படும் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

**வினா இல 10**

1. அ) மனித தேவைகளின் பண்புகள் இரண்டு தருக.
ஆ) சேவை வணிகங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா பொய்யானதா எனக் குறிப்பிடுக.
a) வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான வளங்கள் உற்பத்திக் காரணிகள் எனப்படும்.
b) முகாமைத்துவச் செயற்பாடுகளின் வெற்றி,முகாமைத் தீர்மானங்களை செயற்படுத்தல் தொடர்பாக அக்கறை கொள்ளும் தரப்பினர் உரிமையாளர் ஆவார்.

c) சர்வதேச ரீதியில் பிரசித்தமடைந்த நிறுவனங்களின் உற்பத்திகள் உள்நாட்டு சந்தைக்கு வருவதனால் உள்நாட்டில் காணப்படும் உற்பத்தி நிறுவனங்கள் நெருக்கடிக்கு உள்ளாதல் என்பது பொருளாதாரச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

d) தொடர்ந்தியங்கும் நிலைப்புத் தன்மையும், சட்டரீதியான தனி மனித அந்தஸ்து கொண்டதுமான தனியார் துறை வணிக அமைப்பு கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் ஆகும்.

3. புதிய பஸ் பேரூந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் இயற்கையான உணவுகளை இரசாயன நஞ்சற்ற முறையில் தயாரிக்கும் உணவகம் ஒன்று காணப்படுகின்றமையால் அவ் உணவகத்துக்கு பெருந்தொகையான வாடிக்கையாளர் வருகை தருகின்றனர்.

அ) இந்த வணிகத்தின் வாய்ப்பொன்றைக் குறிப்பிடுக.

ஆ) எதிர்காலத்தில் இவ் வணிகத்திற்கு ஏற்படக் கூடிய சவாலொன்றைக் குறிப்பிடுக.

4. தனியாள் வணிகமொன்றைக் பதிவு செய்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக.